3. அறிவிப்புகள்.

(அ) ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், அவையுரிமைக் கேள்வியையும் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்ட்டின், திரு. சுப்பையா, திரு. கருப்பையா ஆகிய மூவரும் ஆலங்குளத்தில் கட்டடம் இடிந்து விழுந்தததைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் கொடுத்துள்ள ஒற்றி வைப்புத் தீர்மானமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 244-வது விதியின்கீழ், 41-வது விதி பிரிவு (3)ன் படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(5) கவன ஈர்ப்பு.

(அ) இராசிபுரம் கூற்றத்தில் மழையின்மையும் மக்கள், கால்நடை அல்லல் நீக்கத் துயர் தணிப்பு நடவடிக்கைகளும்.

(ஆ) மேட்டூர் வட்டம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மழையின்மையும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தலும்.

திரு. பெ. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இராசிபுரம் கூற்றத்தில் (தாலுக்கா) பருவ மழையின்மையால் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் உழவர் பெருங்குடியினர் அவதியுறும் நிலையில் ஆடுமாடுகளுக்குத் தீவனமின்றி அல்லற்படும் நிலைபற்றியும், உடனடியாகத் துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : மேட்டூர்தாலுக்கா கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இரண்டு வருடங்களாக மழை சரியாக இல்லாததால் விவசாயிகள் வாங்கி இருக்கும் கடன்களையும் வரிகளையும் கட்டமுடியாமலிருப்பதால் அந்தப் பகுதியைப் பஞ்சப் பகுதியாக அறிவித்து அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இராசிபுரம் வட்டத்தில் குடி தண்ணீர் பற்றுக்குறை இருப்பதாக சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவித்துள்ளார். இந்த வட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக இதுவரை ரூ. 37,240 செலவு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஏற்கனவே வழங்கிய ரூ. 2 லட்சத்துடன், அரசின் வருவாய்த்துறை